


# 12வது ஞாஞச்சாரியார்
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
## அவர்களின் எழுத்துக்கள்





11வது ஞாஞச்சாரியார்

12வது ஞாஞச்சாரியார்

**ஐப்பசி மாத வெளியீடு**

பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,112

# ஆதிசிவனார் தமிழில் அருளிய இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!

## "தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்"

கட்டுரையின் 3ஆம் பகுதி

***உள்ளுறைத் தலைப்புக்கள்:***

1. தமிழ்மொழியில் உள்ள இந்துவேதத்தின் பெருமைகள்
2. இன்றைக்கு யார் தமிழை மதிக்கிறார்கள்? என்ற ஐய வினாவும் அதன் விளக்கமும்.
3. பெரும்பாலான தமிழாசிரியர்கள் நாத்திகர்களாகவே இருக்கின்ற இன்றைய நிலை.
4. மதப் பொதுமை, மதப் பொறை, மதச் சமத்துவம், எம்மதமும் சம்மதம் என்பவை பற்றிய உண்மை விளக்கங்கள்.
5. இந்துமதம் தேவை! தேவை!! தேவை!!!
6. இந்துமதத்துக்கு வருங்காலம் உண்டா? இல்லையா?

www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துத் தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.

# ஆதிசிவனார் தமிழில் அருளிய இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!

## "தமிழர்களே! தமிழாசிரியர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்"

*[முந்தைய இதழின் தொடர்ச்சி...]*

(14) அதாவது, தமிழ்நாட்டுப் பற்றும், இனப்பற்றும், மொழிப்பற்றும், ஆன்மீக உணர்வும், ஆத்திக நோக்கும், பத்திநெறிப் போக்கும் உடைய தமிழர்கள்; தமிழிலக்கியப் பெருமைகளைப் பறைசாற்றி வீரமுழக்கமிடுவது போல், தமிழ் மொழியிலுள்ள இந்துவேதப் பெருமைகளையும் பறைசாற்றி வீரமுழக்கமிட முன்வர வேண்டும்! முன்வர வேண்டும்!! முன்வர வேண்டும்!!! ஏனெனில்,

- தமிழ்மொழியில்தான் இந்துவேதம் இருக்கிறது.
- தமிழ்மொழியில்தான் இந்துமத நூல்கள் இருக்கின்றன,
- இந்துவேதத்தில் கடவுள்களையும், கோயில்களையும், பூசைகளையும், மந்திரங்களையும்.... பற்றி மட்டுமே செய்திகள் இல்லை; **இதில் இல்லாத செய்திகளே இல்லை.**
- இந்துவேதத்தில் அருளுலகையும், பொருளுலகையும் பற்றிய செய்திகள் தேவையான அளவுக்கும் மேல் போதுமான அளவு இருக்கின்றன.
- இந்து வேதத்தின் மூலம் தான் தமிழ்மொழியின் அருமை, பெருமை, அரிய பேராற்றல், தொன்மை, மேன்மை, நுண்மை, திண்மை, ஒண்மை, **அண்டபேரண்டமளாவிய ஆட்சிநிலை, மாருத இளமைக் கன்னிக் கோலநிலை, எம்மொழியிலுமில்லா தரம், திரம், திறம் எனும் முப்பண்புகளைப் பெற்று முத்தமிழ் என்று பெயர் பெற்றுள்ள தனிச்சிறப்பு முதலியவை அனைத்தும் வெளிப்பட்டாக வேண்டும்.**
- இந்து வேதக் கோயில்கள், வழிபடு நிலையங்கள், பசனை மடங்கள், கருவறைகள், வெட்டவெளிக் கருவறைகள், வழிபாட்டு நிலையக் கருவறைகள், கோயில் மூலக் கருவறைகள், தனியார் பூசை அறைகள், ஆசிரமக் குடில்கள், பத்திப் பாட்டைகள், சத்திச் சாலைகள், சித்திச் சோலைகள், முத்தி மன்றங்கள், தவப் பள்ளிகள், அருட் கோட்டங்கள், அருளாளர் வடிவங்கள், அருளாளர் வாழிடங்கள்.... முதலிய அனைத்துமே **தமிழ்மொழி எழுத்துக்களால் உருவாகும் சக்கரங்களின் மூலம்தான் அருளாற்றல் ஏற்றப் பெறுகின்றன** என்ற பேருண்மைகள் இந்துவேதத்தின் மூலம்தான் உலகறியச் செய்ய முடியும்.
- தமிழ்தான் இந்து வேதம்,
- தமிழ்மொழி எழுத்துக்கள் (i) உயிர் எழுத்துக்கள், (ii) மெய்யெழுத்துக்கள், (iii) உயிர்மெய்யெழுத்துக்கள், (iv) ஆயுத எழுத்து, (v) குற்றியலுகர எழுத்துக்கள், (vi) குற்றியலிகர எழுத்துக்கள், (vii) நெட்டெழுத்துக்கள், (viii) குட்டெழுத்துக்கள், (ix) வல்லின எழுத்துக்கள், (x) மெல்லின எழுத்துக்கள், (xi) இடையின எழுத்துக்கள், (xii) நச்செழுத்துக்கள்.... என்று பன்னிரண்டு வகைகளாகப் பகுக்கப்பட்டுப் பட்டியலிடப் பட்டுள்ளதின் அரிய, கூரிய, சீரிய, பெரிய, நேரிய, வீரிய பயன்கள் அனைத்தும் இந்துவேதத்தில்தான் மிகமிக நுட்பமாக வரையறுக்கப்பட்டுத் திட்டவட்டமாக விளக்கப்படுகின்றன! விளக்கப்படுகின்றன!! விளக்கப்படுகின்றன!!!
- தமிழின் மலர்ச்சியே இந்துவேத மலர்ச்சி,
- தமிழின் வளவளர்ச்சியே இந்துவேதத்தின் வளவளர்ச்சி,
- தமிழரின் விழிச்சியே இந்துவேத விழிச்சி,
- தமிழரின் எழிச்சியே இந்துவேத எழிச்சி,
- தமிழரின் முயற்சியே இந்துவேத முயற்சி
- தமிழரின் ஆன்மீகப் பயிற்சியே இந்துவேதப் பயிற்சி,

- தமிழரின் உயர்ச்சியே இந்துவேத உயர்ச்சி,
- தமிழரின் செழிச்சியே இந்துவேதச் செழிச்சி,
- தமிழ்ச் சமுதாய மறுமலர்ச்சியே இந்துவேத சமுதாய மறுமலர்ச்சி,
- தமிழ்ச் சமுதாயம் ஒன்றுபடலே இந்துவேத சமுதாயம் ஒன்றுபடல்,
- தமிழ்ச் சமுதாய ஒருமைப்பாடே இந்துவேத சமுதாய ஒருமைப்பாடு,
- தமிழ்ச் சமுதாயத்தின் தன்னம்பிக்கை வலிமையே இந்துவேத சமுதாயத்தின் தன்னம்பிக்கை வலிமை.
- தமிழ்ச் சமுதாயத்தின் பாரம்பரியக் கருத்துப் புரட்சியே! இந்துவேத சமுதாயத்தின் பாரம்பரியக் கருத்துப் புரட்சி,
- தமிழ்ச் சமுதாயத்தின் பாரம்பரிய எண்ணப் புரட்சியே இந்துவேத சமுதாயத்தின் பாரம்பரிய எண்ணப் புரட்சி,
- தமிழ்ச் சமுதாயத்தின் பாரம்பரிய சிந்தனைப் புரட்சியே இந்துவேத சமுதாயத்தின் பாரம்பரிய சிந்தனைப் புரட்சி
- தமிழ்ச் சமுதாயத்தின் பாரம்பரியப் பண்பாட்டுப் புரட்சியே இந்துவேத சமுதாயத்தின் பாரம்பரிய பண்பாட்டுப் புரட்சி,
- தமிழ் நாட்டுக் கோயில்களை செப்பனிடலே இந்துவேத வாழ்வைச் செப்பனிடலாகும்.
- தமிழ்நாட்டுக் கோயில் நிர்வாகங்களை ஒழுங்கு படுத்துதலே இந்துவேத வழி நாட்டு நிர்வாகத்தையே ஒழுங்குபடுத்துவதாகும்,
- தமிழ்நாட்டு நாத்திகர்களைத் திருத்தி ஆத்திகராக்குவதே இந்துவேத வழி நாட்டாட்சியை மீட்சி பெறச் செய்வதாகும்,
- தமிழ்நாட்டுக் கோயில்களில் எல்லாம் விளக்குச் சுடர்விட்டு ஒளிபரவும்படி செய்வதே இந்துவேத வழி நாடு தழுவிய நல்லாட்சி அமைப்பதாகும்.
- தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் இந்துவேத முழக்கம் எழச் செய்வதே நாடு முழுவதும் இந்துவேத முழக்கம் எழச் செய்வதாகும்,
- தமிழ்நாடே இந்துவேதத்தின் பிறப்பிடம் என்பதைத் தமிழரனைவரும் உணரச் செய்வதே இந்து வேதத்தை உலகம் முழுவதும் பரவிடச் செய்வதாகும்,
- தமிழ்நாட்டில் இந்துவேத நம்பிக்கையும், நாட்டமும், ஈடுபாடும், விருப்பமும், பயிற்சியும், வாழ்வும் பிழைக்கும்படி செய்திட்டால் இந்தியா முழுதும் மட்டுமல்ல, உலகம் முழுதும் இந்துவேதம் தழைக்கும்! தழைக்கும்!! தழைக்கும்!!! எனவே, தமிழ்நாட்டில் இந்து வேதம் தழைக்கச் செய்வதே இந்தியா முழுதும் இந்து வேதத்தைத் தழைக்கச் செய்வதாகும்.
- தமிழ்நாட்டில் தமிழர்களில் தயாரான இந்துவேத விற்பண்ணர்கள் கோயில், திருவிழா, கலை நிகழ்ச்சி, கல்விச்சாலை, பட்டிமன்றம்... என்று அனைத்து இடங்களிலும் இந்துவேதக் கருத்துக்களையும், செய்திகளையும், வரலாறுகளையும், வாழ்வியல்களையும், சமுதாயச் சட்டதிட்டக் கட்டுப்பாட்டு நெறிகளையும், ஒழுகலாறுகளையும், அரசியலமைப்பு முறைகளையும், நீதிகளையும், சட்ட விதிகளையும், உலகியலின் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும்.... விளக்கி யுரைக்கும்படி செய்திட்டால், இமயத்தின் முகடு கடந்து உலகின் தென் துருவம் முதல் வட துருவம் வரை இந்துவேதம் ஆட்சி செய்யும் நிலை உருவாகிடும்! உருவாகிடும்!! உருவாகிடும்!!!

எனவேதான், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், சித்தர், "தமிழர்களே இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்" என்று அழைப்பு விடுக்கிறார்! அழைப்பு விடுக்கிறார்!! அழைப்பு விடுக்கிறார்!!!

(15) இன்றைக்கு யாருக்கு இந்துவேதத்தைப் பற்றி அக்கரையிருக்கிறது? என்ற வினா ஏறத்தாழ எல்லோரிடமுமே நிலையாக இருக்கின்றது.

எனவேதான், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், சித்தர் இந்துவேதம் பற்றியும், இந்துவேத மதமான இந்துமதம் பற்றியும் எடுத்துக் கொண்ட இடைவிடாத முயற்சிகள் பற்றி பலரும் பலவிதமாக முணுமுணுப்பதும், வாய்விட்டே வருத்தம் தெரிவிப்பதும், பரிதாபப் படுவதும், சிலர் கேலியும் கிண்டலும் பேசுவதும்.... தொடருகின்றன. இவர்களுக்கெல்லாம் உரிய பதிலை வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த "இந்துக்களே! இந்துவேதத்தையும், இந்து மதத்தையும் புரிந்து கொள்ளுங்கள்!", "தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்" என்ற இரண்டு அறிவிப்பு அழைப்பு வேண்டுகோள்களைத் தொடர்ந்து விடுத்து வருகின்றார் குவலய குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், சித்தர். இப்பொழுது இவ்விரு வேண்டுகோள் - களையும் தலைப்பாகக் கொண்டே இச் சிறுநூல் உருவாகிறது.

இச்சிறுநூல் உருவாவதற்குக் காரணமே அண்டபேரண்டங்கள் அனைத்தையுமே நல்வாழ்வு வாழச் செய்யும் இந்துவேதமும், இந்து மதமும் எழுதப்பட்டுள்ள அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி பிறந்த தமிழ் நாட்டிலே! இத் தெய்வீகச் செந்தமிழ் மொழியைத் தாய்மொழியாக உடைய தமிழர்களுக்கிடையிலே! நாத்திக உணர்வும், கடவுள் வெறுப்புணர்வும், மத மறுப்புணர்வும் தொடர்ந்து முட்புதர்களாக வளர்ந்து காடாக மண்டி அனைத்து வழிவகைகளையும், நெறிமுறைகளையும், ஒழுகலாறுகளையும், பாரம்பரிய மரபுகளையும் மிகப் பெரிய அளவில் பாதித்து விட்டதுதான். **தமிழ்நாட்டிலும், தமிழர்களுக்கிடையிலும் விளைந்து விட்ட பாதிப்புக்கள் வட இமய விளிம்பு முதல் தென்கோடிக் கன்னியாகுமரிக் கடற்கரை மணல் பரப்பு வரை பரவிக் கிடக்கும் இந்துவேத நாடான, இந்துமத நாடான இந்தியாவையே மிகப் பெரிய அளவில் பாதித்து விட்டது! பாதித்து விட்டது!! பாதித்து விட்டது!!!**

அதாவது இந்துவேதமும், இந்துமதமும் பிறந்த தமிழ் நாட்டிலேயே இந்துவேதத்தைப் பற்றியும், இந்து மதத்தைப் பற்றியும் அக்கரை இல்லாத நிலை வளர்ந்து விட்டது என்பதால்தான், இந்தியா முழுவதும் இந்துவேதத்தைப் பற்றியும், இந்துமதத்தைப் பற்றியும் அக்கரை இல்லாத நிலை வளர்ந்து விட்டது. எனவே, இந்த நிலையை உடனடியாக மாற்றியேயாக வேண்டும் என்று முடிவு செய்துதான், இந்துவேத நாயகம், இந்து மதத் தந்தை, இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், சித்தர் அவர்கள் இந்துவேதத்தைப் பற்றியும், இந்துமதத்தைப் பற்றியும் அக்கரையுடையவர்களே இல்லையென்று கருதும் நிலையே வளர்ந்தோங்கி யுள்ள இன்றைக்குத் தனியொருவராகத் தமது முயற்சிகளைத் துவக்கி தமது பதினெண்சித்தர் மடத்துக்கும், பீடத்துக்குமுரிய 'குருகுலம்', 'திருகுலம்', 'தருகுலம்', 'கருகுலம்' எனும் நான்கிலும் முறையான பயிற்சிகளால் உருவாக்கியுள்ள சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், பண்டார சந்நதிகள், ஆச்சாரியார்கள், சாத்திரியார்கள், தோத்திரியார்கள் எனப்படும் நாற்பத்தெட்டு(48) வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களையும் பல்லாயிரக் கணக்கில் உருவாக்கிய பிறகே இந்துவேதத்தையும், இந்துவேத மதமான இந்துமதத்தையும், இவை வாழும் இந்தியாவையும் காப்பாற்றுவதற்குரிய மாபெரும் முயற்சியில் நிதானமாக, அமைதியாக நன்கு திட்டமிட்டு இறங்கியுள்ளார்! இறங்கியுள்ளார்!! இறங்கியுள்ளார்!!! எனவேதான் அவர் தரும் கருத்து வாசக முழக்கங்களை உற்று நோக்கிக் கற்றுத் தேர்ந்தாவது அவரைப் பின்பற்றுவோர் வரட்டுமென்று பல சிறிய பெரிய கருத்து முழக்க வெளியீடுகளை அச்சிட்டு வழங்கி வருகிறார். அவற்றுள் சில:

- இந்துவேதம் வளர்ப்போம்! இந்தியாவைக் காப்போம்!
- இந்துமதம் ஆட்சி மீட்சி பெறச் செய்வோம்! இந்தியாவில் பண்பாட்டுப் புரட்சி விளைவிப்போம்!
- இந்துவேதம் கற்பிப்போம்! இந்தியாவை ஒற்றுமைப் படுத்துவோம்!

- இந்துமத வழி கல்வி, கலை, தொழில் ஆட்சியுறட்டும். இந்தியாவை அடிமை நிலைகளிலிருந்து மீட்சி பெறச் செய்வோம்!
- இந்துமத நாகரீகத்தை மறுமலர்ச்சி பெறச் செய்வோம்! இந்திய வறட்சி, மிரட்சி அனைத்தையும் விரட்டி ஓட்டுவோம்!
- செந்தமிழ் மொழியிலுள்ள இந்துவேதத்தை இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்ப்போம்! இந்து மதத்தவர்க்கிடையில் உள்ள அறியாமைகள், புரியாமைகள், தெரியாமைகள் அனைத்தும் அகற்றுவோம்!
- செந்தமிழாசிரியர்களை இந்து வேத ஆச்சாரியார்களாக்கி இந்தியா முழுதுமனுப்பி இந்துவேதம் பரப்புவோம். இந்தியர் அனைவரிடமும் விந்தைமிகு பந்த பாச இந்துமத ஒற்றுமையுணர்வை விளைவிப்போம்!
- இந்துவேதமே (இந்துக்களின்) இந்தியரின் அக வாழ்வின் வறுமைகளையும், வெறுமைகளையும், ஏக்கங்களையும், ஏமாற்றங்களையும் போக்கிடும், நீக்கிடும்! நீக்கிடும்!! நீக்கிடும்!!!
- இந்துமதமே இந்தியாவின் புறவாழ்வில் உள்ள மேனாட்டு மோகப் போதையை அகற்றி அடிமைநிலையை மிடிமை நிலையை விரட்டியோட்டிடும்! விரட்டியோட்டிடும்!! விரட்டியோட்டிடும்!!!
- இந்துக்களே! இந்துவேதத்தையும் இந்துமதத்தையும் புரிந்து கொண்டால்தான் இந்தியாவைக் காப்பாற்ற முடியும்! இந்தியப் பண்பாட்டைக் காப்பாற்ற முடியும்!! இந்திய நாகரீகத்தைக் காப்பாற்ற முடியும்!!!

இந்தக் கருத்து முழக்க வாசகங்களே போதும்; *இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், சித்தர் அவர்கள்,* - இன்றைக்கு யாருக்குமே இந்துவேதம் பற்றியும், இந்துமதம் பற்றியும் அக்கரையில்லா விட்டாலும் - தாம் மட்டும் தனித்துத் தமது திருமடத்தின் அடியார், அடியாள், அடியான் கூட்டத்துடன் ***"இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் மறுமலர்ச்சி அடையச் செய்யவும்! வளவளர்ச்சி அடையச் செய்யவும்!! ஆட்சி மாட்சி மீட்சி பெறச் செய்யவும்!!! முயலுகிறார்! முயலுகிறார்!! முயலுகிறார்!!! முயன்று கொண்டே இருக்கிறார்! முயன்று கொண்டே இருக்கிறார்!! முயன்று கொண்டே இருக்கிறார்!!!"*** - என்பதற்குரிய பொருளை விளங்கிக் கொண்டிட, புரிந்து கொண்டிட.



***பதினெண்சித்தர் பீடாதிபதிகள் அனைத்து வகைப்பட்ட வழிபடுநிலை பெற்றவர்களுக்கும், விண்வெளியிலுள்ள அனைத்து வகை தாத்தாக்களுக்கும் ஆத்தாக்களுக்கும், மண்ணுலகிலுள்ள அனைத்துவகைச் சித்தர்களுக்கும், அருளாளர்களுக்கும், அருளாளிகளுக்கும், மருளாளர்களுக்கும், மருளாளிகளுக்கும் உரிமை வாரிசுகளாக, பெருமைக்குரிய பதிலிகளாக செயல்பட வேண்டியவர்களே ஆவார்கள்.***

## இன்றைக்கு யார் தமிழை மதிக்கிறார்கள்? என்று ஐய வினா எழுப்பப் பட்டிருக்கிறது.

அதாவது, இன்றைக்கு யாருமே தமிழை மதிக்கவில்லை. இப்படிப்பட்ட இந்தக் காலத்தில் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் ஏன் தமிழின் அருமை பெருமைகளையும், உரிமைகளையும், அரிய சிறப்புக்களையும் எடுத்துக் கூறிடும் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டுத் தமது கருத்தையும், காலத்தையும், முயற்சியையும் வீணாக்கிக் கொண்டிருக்கின்றார்? என்பதே பலருடைய ஐய வினாவாக, முணுமுணுப்பாக, மறைமுக இடித்துரையாக, பரிதாபப் பரிந்துரையாக இருக்கின்றது.

(1) இதற்கு அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியாரின் ஒரே பதில் 'இன்றைக்குத் தமிழர்களே தமிழ் மொழியின் அருமை, பெருமை, அரிய, பெரிய, தெய்வீக ஆற்றல், தொன்மை, மேன்மை, நுண்மை, திண்மை, ஒண்மை... முதலியவைகளை எண்ணிப் பார்க்க விரும்பாமலும் நம்பிச் செயல்படாமலும் இருக்கின்றார்கள்' என்ற பேருண்மையே வியப்பையும் வேதனையையும் தருகிறது. அதைத் தாங்க முடியாமலேயே முழுமையாகத் தமிழுக்கு உழைக்கப் புறப்பட்டிருக்கின்றோம் என்று கூறுகிறார்.

மேலும் அவரே "இந்த நிலை தமிழுக்கு ஏன் வந்தது? இது இயல்பாகத் தானாக வந்த சொந்த நிலையா? அல்லது வேறு யாராவது நன்கு திட்டமிட்டுத் தந்த நிலையா? இன்றைக்கு யார் தமிழை மதிக்கிறார்கள்? யார் யார் தமிழை மதிக்க வில்லை? ஏன்? எதற்காக? எவ்வாறு? ... என்று வினாக்களை எழுப்பி விடை கண்டு அவற்றினடியாகச் செயல்படுகிறோம் யாம்" என்று கூறுகிறார்.

முதலில் இன்றைக்கு யார் யார் தமிழை மதிக்கிறார்கள்? யார் யார் தமிழை மதிக்க வில்லை? என்ற பட்டியலிட்டு ஆராயும் போதுதான் தமிழை மதிப்பதால் ஏற்படக் கூடிய ஈட்டம் என்ன? தமிழை மதிக்காததால் ஏற்படக் கூடிய இழப்பு என்ன? பாதிப்பு என்ன? என்று வினாவெழுப்பிச் சிந்திக்க நேரிட்டது என்று மிகத் தெளிவாகத் தமது முயற்சிகளின் வரலாற்றைக் கூறுகிறார் ஞானாச்சாரியார்.

அவரது முயற்சிகளின் வரலாறு, நான்குயுக வரலாறாக மிகப் பெரியதாக விரிகின்றது....

(2) இன்றைய நிலையில் தமிழ் நாட்டிலும் சரி, இந்திய நாட்டிலும் சரி, ... தனி மனிதர்களும், தலைவர்களுடன் உள்ள அமைப்புக்களும், அரசாங்கமும் **'தாய்நாடு', 'தாய்மொழி', 'தாய்நாட்டுப் பண்பாடு', 'தாய்நாட்டு நாகரீகம்', 'தாய்நாட்டு ஒற்றுமை', 'தாய்நாட்டு நல்வாழ்வு', 'தாய்நாட்டு முன்னேற்றம்', 'தாய்நாட்டின் வருங்காலம்'** என்று எதையுமே எண்ணிப் பார்த்துச் செயல்படக் கூடிய நிலையில் இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!!!!.... இதுதான் இன்றைய இந்தியாவின் உண்மையான நிலை! உண்மையான நிலை!! உண்மையான நிலை!!! இதற்கு காரணம் என்ன? என்று ஆராயும் போதுதான் இன்றுள்ள பெரும்பான்மையான மக்கள், அதாவது ஆண்டி முதல் அரசாளும் பொறுப்பில் உள்ளவர் வரை ஏறத்தாழ எல்லோருமே, **தானென்று அகம்பாவம், ஆணவம், வம்பு, வீம்பு, போட்டி, குறுகிய தன்னல வெறி, தனக்கென்ற பேராசை வெறி** ... முதலிய அற்ப உணர்வுகளுக்கும் உந்துதல்களுக்கும் அடிமையாகி விட்டார்கள். அப்படிப்பட்ட அவலமான, கேவலமான நிலையிலிருந்து வீட்டையும், நாட்டையும் காப்பாற்ற வேண்டும்! காப்பாற்ற வேண்டும்!! காப்பாற்ற வேண்டும்!!! காப்பாற்றியேயாக வேண்டும்!!!! அதற்கு **என்னென்ன செய்ய வேண்டும்? யார்யார் மூலம் செய்ய வேண்டும்?** என்றெல்லாம் முறையாக எண்ணியெண்ணிப் பார்க்கும் போதுதான் அனைத்து வகைப்பட்ட **குறைகள்! குழறுபடிகள்!! குழப்பங்கள்!!! குறுக்கீடுகள்!!!! குந்தகங்கள்!!!!! தவறுகள்!!!!! பிழைகள்!!!!! இழிவழிவுகள் தீமைகள் முதலிய அனைத்தையும் வேருடன் களைய வேண்டும், முழுமையாக அகற்ற வேண்டும்'**. அதற்கு ஒரே ஒரு வழி நம் மக்களுக்கு ஆன்மீக உணர்வை ஊட்ட வேண்டும்.

அதற்காக இந்து வேதம், இந்து வேத பாடசாலைகளிலும், குருகுலங்களிலும், திருகுலங்களிலும், தருகுலங்களிலும், கருகுலத்திலும்

மட்டுமே ஓதப்படலும், ஓதுவிக்கப் படலும், கற்றலும், கற்பிக்கப்படலும், பயிலுதலும் பயிற்றுவித்தலும் நிகழுதலோடு எல்லாக் கல்வி, கலை தொழிற்கல்வி, ஆய்வுமன்றம், ஆராய்ச்சி நிறுவனம் முதலிய அனைத்திலும் இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் முதன்மையான இடம் பெற வேண்டும். இம் மண்ணுலகில் இன்று கி.பி. 1993இன் கணக்குப்படி, 43,73,094 ஆண்டுகளுக்கு முன்னால் **பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனார்** அருளிய இந்துவேத நூல்கள் (396) முன்னூற்றுத் தொண்ணூற்றாறும், இந்துமத நூல்கள் (36) முப்பத்தாறும் வழங்கும் தனிமனித வாழ்வு பற்றிய ஒழுகலாறு, சமுதாய வாழ்வு பற்றிய ஒழுகலாறு, அரசியல் வாழ்க்கை பற்றிய ஒழுகலாறு, பிறப்பிறப்புப் பற்றிய பேருண்மைகள், அரிய மனித வாழ்வில் அல்லவை களையெடுக்கப் பட்டுப் நல்லவை விளைவிக்கப் பட்டிடக் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் நியதிகள், நீதிகள், விதிகள், நெறிமுறைகள், பழக்க வழக்க ஒழுகலாறுகள், மரபுகள், உறவுகள், உரிமைகள், கடமைகள், கண்ணியங்கள், கட்டுப்பாடுகள், பொருளாதாரக் கொள்கைகள், தொழில் கோட்பாடுகள், இல்லறப் பண்புகள், இறையியல் தத்துவங்கள், மதச் சித்தாந்தங்கள் முதலியவைகளால்தான் அரசாளும் பெரும் பொறுப்பில் உள்ளவர் முதல், அன்றாடம் பிச்சை பெற்று வாழும் ஆண்டி வரை தங்கள் தங்களுடைய வாழ்க்கையின் தன்மை, கடமை, பொறுப்பு, ஆசையின் எல்லை, உரிமை, பெருமை, .... முதலியவைகளைப் புரிந்து நடக்கும்படி செய்யமுடியும்! செய்யமுடியும்!! செய்யமுடியும்!!! அவற்றால்தான் அன்னிய மொழிகளாலும், வேதங்களாலும், வேத மதங்களாலும், அவற்றின் பண்பாட்டாலும், நாகரீகத்தாலும் விளைந்துவிட்ட களைகள் போன்ற அவலங்களும், கேவலங்களும், இழிவுகளும், பழிகளும், அழிவுகளும், பேராசைகளும் இம்மண்ணின் பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும் விரோதமான செயல்களும், துரோகமான எண்ணங்களும் ... வேருடன் களையெடுக்கப் பட்டிடும்! களையெடுக்கப்பட்டிடும்!! களையெடுக்கப்பட்டிடும்!!!

அதற்கு இந்துவேத நூல்களை ஓதுதற்குரிய தமிழ்மொழி பெரிதும் மதிக்கப்பட வேண்டும்! தமிழ்மொழியின் பெருமையும் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும்!! தமிழ்மொழியை பெரும்பாலான ஆன்மீக ஆர்வமுடையோர் கற்றுப் பயன்படுத்திடத் தேவையான எல்லா வசதிவாய்ப்புக்களும் உருவாக்கித் தரப்படல் வேண்டும்!!! கன்னியாகுமரி முனைக் கடல்பரப்பிலிருந்து வட இமயமலைப் பெருஞ்சிகரத்தின் விளிம்பு வரை தமிழ்மொழியின் ஒலி ஒலிக்க வேண்டும்! தமிழ்மொழியின் ஒலி ஒலிக்க வேண்டும்!! தமிழ்மொழியின் ஒலி ஒலிக்க வேண்டும்!!! தமிழ்மொழியின் ஒலி ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும்! இருக்க வேண்டும்!! இருக்க வேண்டும்!!! இருந்தேயாக வேண்டும்!!!!

ஏனெனில்,

- ❖ தமிழ் ஒலியே வேத ஒலி
- ❖ தமிழ் எழுத்துக்களே இந்துவேத வடிவங்கள்
- ❖ தமிழ்ச் சொற்களே இந்துவேதக் கடவுள்கள்
- ❖ தமிழ்ச் சொற்றொடர்களே! வாக்குகளே! வாக்கியங்களே! வாசகங்களே! இந்துவேதக் கடவுள்களை உயிர்ப்பித்து இயக்கும் மந்திரங்கள்
- ❖ தமிழ் மொழியே கடவுளர் மொழி! தெய்வ மொழி! தேவ மொழி! ஆண்டவர் மொழி!
- ❖ தமிழ்மொழியே அருளுலக ஆட்சி மொழி!
- ❖ தமிழ்மொழியை நன்கு பிழையற்றுப் பேசுவதே கடவுள்களோடு பேசுவதாகும்
- ❖ தமிழைக் கற்பதே சிறந்த தவம்
- ❖ தமிழைக் கற்பதே சிறந்த பூசை
- ❖ தமிழ்மொழியில் பேசுவதைக் கேட்பதே சிறந்த புண்ணியம்....

என்று இருக்கு வேதத்தில் மிகத் தெளிவாகப் பலநூறு வாக்குகளிலும், வாக்கியங்களிலும் தமிழின் அருமை பெருமை அரிய கடவுட் பண்புகள் அருட்பயன்கள் விளக்கப் படுகின்றன. இதே கருத்துக்கள் 'அசுர வேதம்' (யசுர் வேதம்), 'யாம வேதம்' (சாம வேதம்), 'அதர்வான வேதம்'

(அதர்வன வேதம்) ஆகிய மூன்றிலும் தெளிவாகக் கூறப்படுகின்றன. இவை மட்டுமின்றிச் சுருதி, ஆரணம், ஆகமம், மீமாம்சை எனும் நான்கிலும் நேமம், நியமம், நிடதம், நிட்டை, நீதி, விதி எனும் ஆறிலும், நவநாதம், பதினெண் சித்தம், முப்பத்தாறு ஓதம், தொண்ணூற்றாறு போதம் எனும் நான்கிலும்; மற்ற இந்துவேத நூல்களிலும், இந்துமதத்தின் முப்பத்தாறு நூல்களிலும் 'தமிழ்மொழியைப் பயன்படுத்தித்தான் அருட்பயன்களையும், பொருட்பயன்களையும் அடைய முடியும் என்ற கருத்து மிகமிகத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் அழுத்தந் திருத்தமாகவும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன.

(3) எனவேதான், 'இன்றைக்குத் தமிழ்மொழியை யார் மதிக்கிறார்கள்?' என்று கேள்வி கேட்டுச் சிந்தித்து; விரைவில் எல்லோருமே தமிழ்மொழியை மதிக்குமாறு செய்திடலாம்! செய்திட வேண்டும்! செய்திட வேண்டும்!! செய்திட வேண்டும்!!! அப்பொழுதுதான், இந்துவேதத்தாலும், இந்துமதத்தாலும், தமிழர்கள், திராவிடர்கள், இந்தியர்கள், இந்துக்கள், ஆசியாக் கண்டத்து மக்கள், உலக மக்கள்.... என்று படிப்படியாக எல்லா மானுடரும் அல்லவை அனைத்தும் அகற்றப் பெற்று, நல்லவை அனைத்தும் நிறைவாக அடையப் பெற்று, நற்பேறு பெறமுடியும்! நற்பேறு பெறமுடியும்!! நற்பேறு பெறமுடியும்!!! இத்தகைய அரும்பெரும் பணியில் பங்கு பெற்றிடத்தான் தமிழர்களை அழைக்கிறார்! அழைக்கிறார்!! அழைக்கிறார்!!!.... அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் சித்தர். இந்த அழைப்பின் முழு வடிவம்தான்

"தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்!"

"தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்!"

"தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்!"

.... என்ற முழக்கம்! முழக்கம்!! முழக்கம்!!!

எனவே தமிழர்களே, இந்த முழக்கத்தைப் பற்றிச் சிந்திக்க முற்படுங்கள். அதன்பிறகாவது அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் சித்தரைச் சந்திக்க வாருங்கள்! வாருங்கள்!! வாருங்கள்!!!

(4) 'இந்துவேதம் தமிழ் மொழியில்தான் முதன்முதலில் வெளியிடப் பட்டது என்ற உண்மையை யார் வரவேற்கப் போகிறார்கள்?...' என்று வினா எழுப்பிக் கவலைப்படத் தேவையில்லை. ஏனென்றால், **'இந்துவேத வரலாறுதான் இந்த உலகின் முறையான முழுமையான வரலாறு.** ஆனால், இந்த உலக வரலாறு உலக வரலாற்று வல்லுநர்களாலும், மேதைகளாலும், நிலவியல் வல்லார்களாலும், உயிரியல் வல்லார்களாலும், பயிரியல் வல்லார்களாலும், மானுடவியல் வல்லார்களாலும், பொருளுலக ஆய்வு விஞ்ஞானிகளாலும்... எவ்வளவோ காலமாக ஆய்வுகள் நிகழ்த்தப் பட்டும் கூட இன்னும் முறையானதாகவும் அமையவில்லை! முழுமையானதாகவும் அமையவில்லை! அதாவது, இந்த உலக வரலாற்றில் எண்ணற்ற தெரியாமைகள், புரியாமைகள், புதிர்கள், இடைவெளிகள், குழப்பங்கள், ஐயங்கள்... இருந்து கொண்டே இருக்கின்றன.

அதாவது இந்த உலக வரலாறு பற்றிய பேருண்மைகளில் பெரும்பாலானவை இன்னும் இருளில்தான் இருக்கின்றன. எனவே, உலக வரலாறு ஒளியிட்டுக் காட்டக் கூடிய வல்லமை எந்த வேதத்துக்கு அல்லது வேத மதத்துக்கு இருக்கின்றதோ! அந்த வேதம்தான் இந்த உலகின் முதல் வேதம், மூத்த வேதம், மூலவேதம், ஆதிவேதம். அந்த மதம்தான் இந்த உலகின் மூல மதம், மூத்த மதம், ஆதி மதம். எனவே, இந்து வேதமும் இந்து மதமும்தான் இந்த உலகில் மூலமானவையாக, மூத்தவையாக ஆதியானவையாகக் கருதப்படும் உரிமையையும், பெருமையையும் பெறுகின்றன! பெறுகின்றன!! பெறுகின்றன!!! பெற்றே விடுகின்றன!!!!

(5) இப்படி உலக மூலமாய், முதலாய், ஆதியாய் விளங்கும் இந்துவேத நூல்களும், இந்துமத நூல்களும் எவரால் எழுதப்பட்டன? எப்பொழுது எழுதப்பட்டன? என்ன மொழியில் எழுதப்பட்டன? அந்த மொழி பிணி, மூப்பு, சாக்காடு எனும் மூன்று நிலைகளையும் வென்று வாழும் தெய்வீக மொழியாயிற்றா? அந்த மொழியைத் தாய்மொழியாகப் பெற்ற இனத்தாரில் வாழையடி வாழையென அருளாளர்கள் தோன்றுகின்றார்களா? தோன்றிக்கொண்டு இருக்கிறார்களா? வேதமொழியைத் தாய்மொழியாகக்

கொண்டவர்களை அதாவது வேத மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இனத்தவர்களைச் சந்திக்க கடவுள்கள், தெய்வங்கள், தேவர் தேவதைகள், ஆண்டவர்கள்... முதலியோர் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றார்களா?.... என்கின்ற வினாக்களை எழுப்பிச் சிந்தித்தும், ஆய்வுகள் நிகழ்த்தியும்.... உண்மையான வேதமொழி எது? உண்மையான கடவுள்மொழி எது? உண்மையான தெய்வீக மொழி எது? தேவமொழி எது? ஆண்டவர் மொழி எது?.... என்று முடிவு கட்ட வேண்டும். அப்பொழுதுதான் இம் மண்ணுலகில் பதினெண்சித்தர்களால் அருளப் பெற்ற அவர்களுடைய தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான "அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான் வேதமொழி" என்ற பேருண்மை விளங்கிடும்! விளங்கிடும்!! விளங்கிடும்!!!


(6) இப்படி **இந்த உலகிலேயே அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான் 'வேத மொழி', 'தேவ மொழி', 'தெய்வ மொழி', 'ஆண்டவர் மொழி', 'கடவுள் மொழி'....** என்ற பேருண்மை ஆராய்ச்சிப் பூர்வமாக மெய்ப்பிக்கப்பட்டு விடுகிறது! மெய்ப்பிக்கப்பட்டு விட்டது என்கின்றபோது! இனிமேல் **"இந்து வேதம் தமிழ் மொழியில்தான் முதன்முதல் வெளியிடப்பட்டது என்ற பேருண்மையை யார் வரவேற்கப் போகிறார்கள் என்று வினா எழுப்பிக் கவலைப் படவோ! கலக்கப் படவோ! தயக்கமடையவோ! தேவையில்லை! தேவையில்லை!! தேவையில்லை!!! தேவையேயில்லை!!! ஏனெனில், இந்த உலகில் எந்த ஒரு மொழியினரிடையேயும் எந்த ஒரு மொழிக்குமுரிய நாட்டிலேயும் கடவுள் அறுபத்து நான்கு முறை நேரில் தோன்றி அருள் புரியவில்லை! கடவுளின் அருள் பெற்ற நாயன்மார்கள் அறுபத்து மூவர், தொகையடியார்கள் தொண்ணூற்றூறு பேர்கள், ஆழ்வார்கள் பன்னிரண்டு பேர்கள், தாயுமானவர்கள், பட்டினத்தார்கள், அருணகிரியார், இராமலிங்க அடிகளார்.... என்று பட்டியலிடுமளவிற்கு அருளாளர்கள் தோன்றிக் கொண்டே இருக்கவில்லை.** எனவே, இனிமேல் உலகோர் அனைவருமே 'இந்துவேதம் தமிழ்மொழியில்தான் முதன்முதல் (எழுதப்பட்டது) வெளியிடப் பட்டது' என்ற உண்மையை ஒப்புக் கொள்வார்கள்! ஒப்புக் கொள்வார்கள்!! ஒப்புக் கொள்வார்கள்!!! ஒப்புக் கொண்டே தீருவார்கள்!!!! ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

(7) இப்பேருண்மையைத் தமிழர்களுக்கு உடனடியாக உணர்த்தியேயாக வேண்டும்! தமிழர்கள் தங்களுடைய தாய்மொழியின் அருமை, பெருமை, அரிய எளிய தெய்வீக உரிமை... முதலியவைகளை உடனடியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொண்டேயாக வேண்டும். அதுவும் ஏறத்தாழ எல்லா தமிழர்களுக்குமே தங்களுடைய தமிழ் மொழியில்தான் 'இந்து வேதம்' முதன்முதல் வெளியிடப் பட்டிருக்கிறது என்ற பேருண்மை முறையாகவும் நிறைவாகவும் புரிந்தேயாக வேண்டும். புரிவிக்கப் பட்டேயாக வேண்டும். அத்துடன் இந்துமத நூல்கள் அனைத்தும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன என்ற பேருண்மையும் எல்லாத் தமிழர்களுக்கும் தெரிந்தேயாக வேண்டும்! புரிந்தேயாக வேண்டும் அல்லது தெரிவிக்கப் பட்டேயாக வேண்டும், புரிவிக்கப் பட்டேயாக வேண்டும்.

அப்பொழுதுதான் தமிழர்கள் இந்து வேதத்தை ஓதவும் இந்துமத நூல்களைப் பயிற்சி செய்யவும் உரிய பயிற்சிகளை செய்திடப் பெருமுயற்சிகளைச் செய்யவும் ஆரம்பிப்பார்கள். அவற்றின் மூலமாகத்தான் இன்றைக்குத் தமிழகத்திலும், திராவிடத்திலும், தென்னிந்தியாவிலும், இந்துமத இந்தியாவிலும், ஆசியாக் கண்டத்திலும், உலகிலும் உள்ள அனைத்து வகையான அவலங்களையும், கேவலங்களையும், இழிவழிவுகளையும், தவறுகளையும், குறைகளையும், முறைகேடுகளையும், வெறிகளையும், பேராசைகளையும், குறுகிய நோக்குகளையும், கோணல்மாணல் குறுக்குவழிப் போக்குகளையும், தானென்ற அகம்பாவ ஆணவங்களையும்.... தடுத்து நிறுத்திடவும், முற்றிலுமாக அகற்றிடவும் **'எல்லா வல்லமைகளையும் பெற்ற அருளாளர்கள்'** தமிழர்களுக்கிடையில் தோன்றிடுவார்கள். தமிழ்நாட்டிலே தோன்றிடுவார்கள். அப்படித் தோன்றும் அருளாளர்களால்தான் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேத நூல்களையும், இந்துமத நூல்களையும் முறையாக முழுமையாக நிறைவாகப் பயன்படுத்தி

மாபெரும் வெற்றிகளைப் பெற முடியும்! மாபெரும் வெற்றிகளைப் பெறமுடியும்!! மாபெரும் வெற்றிகளைப் பெறமுடியும்!!!

அவற்றைத் தொலைநோக்கு உணர்வோடு எண்ணிப் பார்த்துத்தான் **அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் சித்தர்** அவர்கள் தமிழர்களுக்குத் தெரியாதிருக்கும் பேருண்மைகளைத் தெரிய வைப்பதற்காக! தமிழர்களுக்குப் புரியாதிருக்கும் பேருண்மைகளைப் புரிய வைப்பதற்காகத் தமிழ்ப் பெருமக்களுக்கு, "தமிழர்களே இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்" என்ற வேண்டுகோளைத் தொடர்ந்து விடுத்துக் கொண்டே இருக்கின்றார். அதாவது, 'தமிழர்கள் தயாராகி விட்டால் போதும் மற்ற எல்லோரையும் தயாரித்து விடலாம்' என்ற கருத்தே அந்தணர் அண்ணல் ஞானுச்சாரியார் சித்தர் கருத்து. எனவே! இன்றைய நிலையின் ஐய வினா????.... "தமிழர்கள் தயாராவார்களா? பிறரைத் தயாரிக்கத் தமிழர்கள் முன்வருவார்களா? அல்லது தயாராவார்களா?!?1?!?!.....



**குவலய குருபீடம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரார்**

## 'பெரும்பாலான தமிழாசிரியர்கள், நாத்திகர்களாகவே இருக்கின்ற இன்றைய காலக் கட்டத்தில், இந்துவேதத்துக்கு எப்படி வரவேற்பு இருக்க முடியும்?

(1) பெரும்பாலான தமிழாசிரியர்கள் நாத்திகர்களாக இருப்பதுதான் இன்றைய காலக் கட்டம். இந்தக் காலக் கட்டம் ஏன் வந்தது? எதற்காக வந்தது? எவ்வாறு வந்தது? தமிழாசிரியர்களுக்கு வந்துவிட்ட இந்த நிலை, இனிமேல் என்றென்றும் இவர்களின் சொந்த நிலையாக ஆகிடுமா? இதை மாற்ற முடியுமா? முடியாதா? இந்த நிலை சரிதானா? பயனுடையதுதானா? .... என்றெல்லாம் வினாக்களை ஆய்வுக்காக எழுப்பிச் சிந்தித்தேயாக வேண்டும். அப்பொழுதுதான்,

தமிழாசிரியர்களுக்கு வருங்காலம் உண்டு!

தமிழாசிரியர்களால் தமிழுக்கு வருங்காலம் உண்டு!!

தமிழாசிரியர்களால் தமிழகத்துக்கு வருங்காலம் உண்டு!!!

தமிழாசிரியர்களால் இந்து வேதத்துக்கும் இந்து மதத்துக்கும் இந்துக்களுக்கும் வருங்காலம் உண்டு!!!!

தமிழாசிரியர்களால் இந்தியாவுக்கு வருங்காலம் உண்டு!!!!!

தமிழாசிரியர்களால் உலகுக்கே வருங்காலம் உண்டு !!!!!!

(2) நமது ஆய்வு வினாக்களால் தெளிவானது; 'தமிழாசிரியர்களுக்'குத் தமிழகத்திலே சமய, சமுதாய, அரசியல் துறைகளில் முழுக்க முழுக்கச் சிறப்போ செல்வாக்கோ, மதிப்போ, மரியாதையோ இல்லாமல் போய்விட்டது! இல்லாமல் போய்விட்டது!! இல்லாமல் போய்விட்டது!!! இல்லவே இல்லாமல் போய்விட்டது. எனவே தமிழாசிரியர்கள் எப்படியாவது தங்களைப் பற்றிய கருத்து ஈர்ப்பு! கவன ஈர்ப்பு! உணர்வு ஈர்ப்பு! உலகியல் அக்கரை.... ஏற்படச் செய்ய வேண்டுமென்று துடி துடித்தார்கள்! துடி துடித்தார்கள்!! துடி துடித்தார்கள்!!!

மேற்படி விழிப்புணர்ச்சியால் தமிழாசிரியர்கள் சமயத்துறையில் தமிழின் உயர்வு, மேன்மை, சிறப்பு, பேராற்றல், பெருமை, உரிமை.... முதலியவைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதவும், பேசவும் முற்பட்டார்கள். ஆனால், சமயத்துறையில் அனைத்து வகையான சாத்தர, சாத்திர, சாத்திறச் சம்பிறதாயங்கள், சடங்குகள், பூசைவிதிகள், பழக்க வழக்க விதிமுறைகள்... முதலிய அனைத்துமே அன்னிய மொழிகளில்தான் ஏட்டளவிலும் நாட்டளவிலும் நாட்டு நடப்பிலும் செல்வாக்குப் பெற்றிருந்தன. எனவே, தமிழாசிரியர்கள் சமயத் துறையில் தீண்டத் தகாதவர்களாக! தமிழாசிரியர்கள் சமயத் துறையிலே தாழ்த்தப் பட்டவர்களாக!! தமிழாசிரியர்கள் சமயத் துறையில் ஒதுக்கப் பட்டவர்களாக!!! தமிழாசிரியர்கள் சமயத் துறையில் புறக்கணிக்கப் பட்டவர்களாக!!!! தமிழாசிரியர்கள் சமயத் துறையில் மறுக்கப் பட்டவர்களாக!!!! தமிழாசிரியர்கள் சமயத் துறையில் வெறுக்கப் பட்டவர்களாக!!!!!.... ஆகி விட்டார்கள்! ஆக்கப்பட்டு விட்டார்கள்! ஆக்கப்பட்டு விட்டார்கள்! ஆக்கப்பட்டு விட்டார்கள்! ஆக்கப்பட்டே விட்டார்கள்!!!

எனவே, தமிழாசிரியர்களுக்குச் சமயத் துறையில் ஏற்பட்டிட்ட வீழ்ச்சியாலும், இகழ்ச்சியாலும் சமயத் துறையின் மீது வெறுப்பும், மறுப்பும், எதிர்ப்பும், பகையும், கோபமும் ஏற்பட்டது! ஏற்பட்டது!! ஏற்பட்டது!!! அதனால் தமிழாசிரியர்கள் மதமறுப்பாளர்களாக! மத வெறுப்பாளர்களாக! மத எதிர்ப்பாளர்களாக! மதப் பகைவர்களாக மாற ஆரம்பித்தார்கள்! மாற ஆரம்பித்தார்கள்! மாற ஆரம்பித்தார்கள்! மாறினார்கள்! மாறினார்கள்!! மாறினார்கள்!!! மாறியே விட்டார்கள்!!!!

அப்படிப்பட்ட காலக் கட்டத்தில் தமிழகத்தில் மேலைய நாட்டாரின் கல்வியாலும், மதங்களாலும், சமுதாயக் கொள்கைகளாலும், தமிழகத்தில் **'சமுதாயச் சீர்திருத்தம்' என்ற உணர்வும், நோக்கும், போக்கும் காட்டுத் தீ போல் பரவின. அக் காட்டுத் தீ உலர்ந்த மரங்கள் மிகுந்த காட்டுக்குள் புகுந்தது போல் இந்திய நாட்டு அரசியல் விடுதலைக் கொள்கையும், நோக்கும், போக்கும், உணர்வும், பழமையானவை அனைத்தையும் கண்டித்தும் எதிர்த்தும் மறுத்தும் வெறுத்தும் பகைத்தும் நகைத்தும் வெறிகொண்டு செயல்பட்ட செயல்கள் சமுதாயச் சீர்திருத்தவாதிகளை வெறியாளர்களாக்கின.**

எனவே, சமுதாயச் சீர்திருத்தவாதிகளும், அரசியல்வாதிகளும் இணைந்து பழமைகளைக் கண்டிக்கும் பணியைச் சூறாவளிப் புயல் போல் செயலாக்கினார்கள். இப்படிச் செயல்பட்டவர்கள் தமிழ் நாட்டில் அனாதைகளாக, நம்பிக்கை யிழந்தவர்களாக, மதிப்பற்றவர்களாக, வெறுமை நிறைந்தவர்களாக இருந்திட்ட தமிழாசிரியர்களைத் தங்கள் பக்கம் இழுத்தார்கள். அப்படிச் சமுதாய, அரசியல்வாதிகளால் இழுக்கப்பட்ட **தமிழாசிரியர்கள் தங்களுடைய நெடுநாளைய சமய மறுப்பு, மதவெறுப்பு, கடவுள் எதிர்ப்பு, அன்னிய மொழிகளின் கோயிலாட்சி, சமுதாய, சமய ஆட்சி பற்றிப் பெற்றிருந்த கோபம்... முதலிய அனைத்தையும் நாத்திக உணர்வாக, நாத்திகக் கொள்கையாக, நாத்திகக் குறிக்கோளாக மாற்றினார்கள்.** அதனால், தமிழகச் சமுதாயச் சீர்திருத்த நிறுவனங்களும், அரசியல் நிறுவனங்களும் நாத்திக நோக்கும், போக்கும் உடைய நிறுவனங்களாக மாறின.

அப்படிப்பட்ட காலக் கட்டத்தில்தான் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தமக்கே உரிய அரசியல் செல்வாக்கு, சாதிச் செல்வாக்கு, பணச் செல்வாக்கு முதலியவைகளோடு

- 'தமிழ் வாழ்க', 'தமிழர் சுயமரியாதை காப்போம்!',
- 'அன்னியர்களும் அன்னிய மொழிகளும் ஆட்சி செய்யும் ஹிந்து மதம் தேவையில்லை',
- 'தமிழ்மொழியிலேயே கோயில் பூசைகளும் சடங்குகளும் நடக்க வேண்டும்',
- 'தமிழர் பண்பாட்டுக்கு ஒவ்வாத அன்னிய மொழி வேதங்களும், புராண இதிகாசங்களும் தேவையில்லை',
- 'ஹிந்து மதத்தின் பெயரால் அன்னியர்களின் காலில் விழுவதும், அன்னியர்களைத் தலைவராக ஏற்பதும், அன்னிய மொழியைக் கடவுள்

மொழியாகக் கருதுவதும் தவறு! தவறு!! தவறு!!!',

- 'தமிழர்கள் தன்மான உணர்வு பெற வேண்டும்', 'தமிழினம் ஒற்றுமைப்பட வேண்டும்', 'தமிழ்மொழியை வளர்க்க வேண்டும்', 'தமிழ்மொழிக்கு ஆட்சி உரிமை பெற்றுத் தரவேண்டும்',
- 'தமிழர்களை ஏமாற்றிச் சுரண்டும் அன்னியர்களை விரட்டி யோட்ட வேண்டும்',
- 'தமிழையும், தமிழர்களையும் இழிவு படுத்தும் அன்னிய மதக் கடவுள்களும் புராண இதிகாசங்களும் ஒழிக்கப் பட்டேயாக வேண்டும்'.
- 'தமிழாசிரியர்கள் நாத்திகர்களாக மாறினால்தான் தமிழரையும், தமிழையும் காப்பாற்ற முடியும். தமிழாசிரியர்கள் பத்தியின் பெயரால் மடமை வளர்க்கக் கூடாது. தமிழர்களுக்கு அன்னிய மொழியில் சாத்திர சம்பிறதாயங்கள் எதற்கு? ஏன்?'....

என்றெல்லாம் கருத்து முழக்க வாசகங்களை வழங்கினார். இப்படிப்பட்ட கருத்து முழக்க வாசகங்களே! தமிழாசிரியர்களைப் பெரிதும் கவர்ந்தன, களிப்பூட்டின. எனவே, தமிழாசிரியர்களில் கணிசமானவர்கள் பெரியாரைத் தலைவராக ஏற்று நாத்திகர்களாக மாறினார்கள்! மாறினார்கள்!! மாறினார்கள்!!! மாறியே விட்டார்கள்!.

பெரியாரைத் தலைவராக ஏற்று நாத்திகராக மாறிய தமிழாசிரியர்கள் கணிசமான அளவினர்தான். ஆனால், பெரும்பாலான தமிழாசிரியர்கள் நாத்திகர்களாக மாறா விட்டாலும், பெரியாரின் கருத்து முழக்க வாசகங்களை அப்படியே முழுமையாக ஒப்புக் கொண்டு ஏற்று, அவருடைய மறைமுக ஆதரவாளர்களக மாறினார்கள்! மாறினார்கள்!! மாறினார்கள்!!! மாறியே விட்டார்கள்!!!!.... எனவே, தாயகத் தமிழாசிரியர்களுக்கிடையில் நாத்திகச் சிந்தனைக்கும் உணர்வுக்கும் நோக்குக்கும் மிகுந்த ஆதரவும் ஆக்க ஊக்கமும் பெருகின. இவற்றின் காரணமாகத்தான் தமிழாசிரியர்களுக்கிடையில் நாத்திகர்கள் அதிகமாகத் தெரியலானார்கள். அந்த நிலையே! காலப் போக்கில் வளர்ச்சி பெற்றுத் தமிழாசிரியர்களுக்கிடையில் அதிகமான நாத்திகர்கள் இருக்கின்ற இன்றைய காலக்கட்டம் உண்டாயிற்று.

எனவே, இன்றைய காலக்கட்டத்தில் தமிழாசிரியர்களுக்கிடையில் நாத்திகர்கள் அதிகமானது ஏன்? எதற்காக? எப்படி? எவரால்?.... என்ற ஐயங்களுக்குரிய விளக்கம் கிடைத்து விட்டது. எனவே, அடுத்து 'தமிழாசிரியர்களுக்கிடையில் நாத்திகர்கள் அதிகமாக இருக்கும் போது இந்து வேதத்துக்கு எப்படி வரவேற்பு இருக்க முடியும்? என்ற ஐயத்துக்கு விளக்கம் கண்டாக வேண்டும். இது மிக மிக எளிய ஒன்றாகும்.

அதாவது,

- ✓ 'பதினெண்சித்தர்கள்தான் இம் மண்ணுலகுக்கு இந்து வேதத்தையும், இந்து மதத்தையும், தங்களுடைய தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் அருளியுள்ளார்கள்',
- ✓ 'இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்குமுரிய அனைத்துச் சாத்தர, சாத்திர, சாத்திறச் சம்பிறதாயச் சடங்கு முறைகளும், பூசைவிதிகளும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இருக்கின்றன',
- ✓ 'பதினெண்சித்தர்களின் இந்துவேதமும், இந்துமதமும் பகுத்தறிவுப் பூர்வமானவை',
- ✓ 'பதினெண்சித்தர்களின் இந்துவேத இந்துமத வரலாறுகள் காலக் கணக்கீட்டு அடிப்படையில் அமைந்தவை; மேலும் இவை எந்தவிதத் தவறான, அசிங்கமான, அருவெறுக்கத் தக்க, நம்ப முடியாத, காட்டுமிராண்டித் தனமான கற்பனைகளைப் பெறாதவை',
- ✓ 'பதினெண்சித்தர்களின் இந்துவேதத்திலும், இந்துமதத்திலும் அன்னிய மொழிகளுக்கோ, அன்னியருக்கோ அடிமைப்படச் செய்யும் கருத்தோ நடைமுறையோ இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!
- ✓ 'பதினெண்சித்தர்களின் இந்துவேதத்தாலும், இந்துமதத்தாலும் தமிழ் வாழும், வளம்

பெறும், வளர்ச்சி பெறும், ஆட்சி பெறும், மாட்சி பெறும்’.

முதலிய பல கருத்துக்களால் பெரியாரிடம் உள்ள மயக்கமும், மாயையும், நாத்திக வாதமும் .... செத்துப் போகும்! செத்துப் போகும்!! செத்துப் போகும்!!! செத்தே போகும். எனவே, தமிழாசிரியர்களுக்கிடையில் நாத்திகர்கள் அதிகமுள்ள இன்றைய காலக் கட்டத்திலும் பதினெண்சித்தர்களுடைய இந்துவேதமும், இந்து மதமும் மிகச் சிறந்த வரவேற்பையும், வாழ்த்தையும் பெற்றிடும்! பெற்றிடும்!! பெற்றிடும்!!! பெற்றே தீரும்!!!!

எனவேதான், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், சித்தர், “தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்” என்ற அறிவிப்பு அழைப்பை வழங்குகிறார்.

“இந்துவேதம் பிழைக்க
இந்துமதம் தழைக்க உழைத்திடத்
தமிழர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்”

“இந்துக்களே!
இந்து வேதத்தையும், இந்து மதத்தையும்
புரிந்து பயனடையுங்கள்”

என்ற அறிவிப்புக்களைத் தொடர்ந்து வழங்குகிறார்.

***தீவாளித் திருநாள்***

தீ ஆவளி சித்தர்கள் உருவாக்கிய திருநாள். கார்த்திகைக்கு அகல் விளக்குகளை வழிபாடு செய்வது போல்; தீ ஆவளிக்கு குத்து விளக்கு ஏற்றியும், தீ வளர்த்தும் [ஐந்தீ] ஒளியை வழிபடுவதுதான் தீ ஆவளித் திருநாள். இந்த ஒளி வணக்கமே இம் மண்ணுலகை அண்டபேரண்டங்களோடு இணைக்கிறது.

# மதப் பொதுமை, மதப் பொறை, மதச் சமத்துவம், எம்மதமும் சம்மதம் என்பவை பற்றி:

“நாட்டு நடப்பில், அரசும், அரசியல் வாதிகளும் ‘இந்துமத வெறி கூடாது’ என்று கூறும் நாத்திகர்களாக **மதப் பொதுமை, மதப் பொறை, மதச் சமத்துவம், எம்மதமும் சம்மதம்** என்று கூறும் இந்துமத உணர்வற்றவர்களாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட இன்றைய நாத்திக, இந்துமதப் பற்றற்ற, இந்துமத உணர்வற்ற, இந்துமதத் துரோக விரோத நோக்கும் போக்கும் ஊக்கும் மிகுந்த! மிகுந்த!! மிகுந்த!!! காலக் கட்டத்தில்.... இந்துவேதம், இந்துவேத நூல்கள், இந்துமதம், இந்துமத நூல்கள் என்று கூறிக்கொண்டு செயலாற்றப் புறப்பட்டிருக்கும் பதினெண்சித்தர் மடாதிபதிக்கு, இந்துவேத நாயகத்துக்கு, இந்துமதத் தந்தைக்கு, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் சித்தருக்குத் தேவையில்லாத மறுப்பும், எதிர்ப்பும், வெறுப்பும், கேலியும், கிண்டலும்தானே பரிசாகக் கிடைக்கும்?!?!?!” என்று பலர் பேசுவதும் சிலர் எம்மிடம் மறைமுகமாகக் கூறுவதும் எமக்குத் தெரியும்! தெரியும்!! தெரியும்!!! இவையனைத்துக்கும் பதில் கூறியே எமது அறிவிப்பு அழைப்பை விடுத்திடும் பணியைத் துவக்கியுள்ளோம் யாம்.

(1) நமது அரசும், அரசியல்வாதிகளும் ‘இந்துமத வெறி கூடாது’ என்று கூறும் நோக்கும், போக்கும், ஊக்கும் உடையவர்களாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? என்று சிந்திக்க வேண்டும். நமது அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப் படுபவர்களைக் கொண்டு நிகழும் **குடியரசு** முறையைப் பெற்றிருக்கிறது. இதனால் ஆட்சியைப் பிடிக்க வேண்டுமென்ற வெறியை உடைய அரசியல்வாதிகளே நமது அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்களாக இருக்கிறார்கள். இதுதான் உண்மை! இதுதான் உண்மை! இதுதான் உண்மை! எனவே, இவர்கள் மாற்று மதத்தவர்களின் அன்பையும், ஆதரவையும் பெற்று அவர்களுடைய வாக்குச் சீட்டுகளைத் தங்களுடைய அரசியல் கட்சிக்கு, நிறுவனத்துக்கு, அமைப்புக்கு வெற்றியைத் தேடித் தரத்

துடிதுடிப்போடும் வெறியோடும் செயல்பட வேண்டிய கட்டாய நிலைக்கு அவசர அவசிய நிலைக்குத் தள்ளப் பட்டுவிட்டார்கள். எனவே, நமது அரசியல் வாதிகள் தங்களுடைய தாய்நாட்டுக்குரிய இந்துவேதத்துக்கும், இந்துமதத்துக்கும் நன்றிக் கடனை நிறைவேற்ற முடியாதவர்களாக, உண்மையான தொண்டாற்ற முடியாதவர்களாக, தங்களுடைய உள்ளத்தில் இயற்கையாக ஊற்றெடுக்கும் பற்றையும், பாசத்தையும், பத்தியையும் வெளிப்படுத்த முடியாதவர்களாக.... தடுமாறுகிறார்கள், குழம்பிக் கலங்கித் தாங்கள் என்ன செய்கிறோம் என்று எண்ணிப் பார்க்காமல் கண்மூடித்தனமாக மாற்று வேதங்களையும், மாற்று மதங்களையும் ஆதரிக்கிறார்கள்! போற்றுகிறார்கள்! பேணிப் பாதுகாக்கிறார்கள். எனவே, இவர்கள் செய்யும் தவறைச் சுட்டிக் காட்டி இவர்களைத் திருத்த முயலும் மாபெரும் பணி! இன்றியமையாத அவசர அவசியப் பணியே இன்றைக்குத் தேவைப்படுகிறது. இதற்காகத்தான் இந்துவேதத்தைப் பரப்பிடவும் இந்துமதத்தை விளக்கியுரைத்திடவும் புறப்பட்டிருக்கிறார் பதினெண் சித்தர் மடாதிபதி.

(2) மதப்பொதுமை வேண்டுமென்று நமது அரசும் அரசியல்வாதிகளும் கூறுகிறார்கள். இக்கருத்தும், நோக்கும் புதுமையானவை! புரட்சியானவை! ஆனால், இந்த மதப்பொதுமை என்ற கருத்தையும் நோக்கையும் இந்த நாட்டுக்கு வந்துள்ள அன்னிய வேதங்களும், மதங்களும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றனவா?!?!?!?! இருக்கின்றனவா!?!? இருக்கின்றனவா?!?!? இது பற்றி நமது அரசும், ஆட்சிப் பொறுப்பில் இல்லாத அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகளும், ஆட்சிப் பொறுப்பில் உள்ள அரசியல் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் சிந்திக்கத் தயாராக இருக்கிறார்களா? இருக்கிறார்களா? இருக்கிறார்களா? இதுபற்றி நாடு தழுவிய கருத்தரங்குகள்! பட்டிமன்றங்கள்! ஆராய்ச்சி மாநாடுகள் நடத்தத் தயாராக இருக்கின்றார்களா? இருக்கின்றார்களா? இருக்கின்றார்களா? இப்படி யெல்லாம் வினாக்களை எழுப்பி விடை காணும் அக்கறையையும் ஆர்வத்தையும் பொதுமக்களிடம் தோற்று - விப்பதற்காகத்தான் பதினெண்சித்தர் மடாதிபதி "இந்துக்களே! இந்துவேதத்தையும் இந்துமதத்தையும் புரிந்து கொள்ளுங்கள்! புரிந்து பயனடையுங்கள்!" என்று முழங்கிச் செயல்பட்டு வருகின்றார்.

## (3) **மதப் பொறை:**

நமது அரசும், அரசியல்வாதிகளும் 'மதப்பொறை', 'மதச் சகிப்புத் தன்மை', 'மதவாழ்வில் விட்டுக் கொடுத்தல்', 'மத வாழ்வில் மாற்று மதங்களோடு பொறுமையாகவும், அமைதியாகவும், அன்பாகவும், மென்மையாகவும் செயல்படல்... முதலிய பண்புகளை நமது இந்துக்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்! வளர்த்துக் கொள்ள வேண்டும்! என்று அறிவுரை கூறுகிறார்கள். இதே அறிவுரையை நமது அரசியல்வாதிகள், இந்த நாட்டுக்கு வந்துள்ள அன்னிய மதத்தவர்களிடம் கூறிட முன் வருவார்களா? முன் வருவார்களா? முன் வருவார்களா? முன்வர முடியுமா? முன்வர முடியுமா? முன்வர முடியும்? கூறிடத் துணிவுண்டோ? என்று வினா எழுப்பி நமது இந்துக்கள் இன்றைய நமது அரசைப் பற்றியும், ஆளுங்கட்சியைப் பற்றியும், அரசியல்வாதிகளைப் பற்றியும், சிந்தனை செய்யுமாறு செய்வதற்காகத்தான் பதினெண்சித்தர் மடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், இந்துவேதம் வளர்க்கவும், இந்துவேதம் பரப்பவும் புறப்பட்டிருக்கிறார்! புறப்பட்டிருக்கிறார்!! புறப்பட்டிருக்கிறார்!!! ஏனென்றால், "இந்துவேதம் தழைத்தால்தான் இந்துமதம் பிழைக்கும்". "இந்துமதம் பிழைத்தால்தான் இந்துக்கள் இந்துக்களாக வாழமுடியும்! வாழமுடியும்!! வாழமுடியும்!!!

## (4) **மதச் சமத்துவம்:-**

நமது அரசும், அரசியல்வாதிகளும் "மாற்று மதங்களை நமது மதத்துக்குச் சமமாக எண்ண வேண்டும்", "மாற்று மதத்தவர்களை நம் மதத்தவர்களைப் போல் மதிப்போடும், அன்போடும் ஏற்றுப் பழகிடல் வேண்டும்", "மாற்று மதத்தின் வேதத்தையும், வேதக் கருத்துக்களையும், மதக் கோயில்களையும், மதச் சடங்குகளையும்,

சம்பிறதாயங்களையும், பழக்க வழக்கங்களையும், வாழ்வியல் நடைமுறைகளையும், பூசைவிதிகளையும், விழாக்களையும், திருநாள்களையும், பூசைமுறைகளையும், பூசைகளையும், மந்திரங்களையும், கடவுள்களையும் நம் மதத்துக்கு உரியவை போல் மதிப்போடும் மரியாதையோடும் அன்போடும் ஏற்றுப் போற்றிப் பேணிடல் வேண்டும்" என்று கூறுகிறார்கள்.... அதாவது, நம் நாட்டில் 'மதச் சமத்துவம் வேண்டும்', 'எல்லா மதங்களுக்கும் சமமாகப் பாதுகாப்புத் தர வேண்டும்', 'எல்லா மதங்களின் நம்பிக்கைகளும், நடைமுறைகளும், கொள்கைகளும், குறிக்கோள்களும் சமமாகப் போற்றிப் பேணிப் பாதுகாத்து மரியாதை செய்யப்படல் வேண்டும்',,,, என்று கூறுகிறார்கள். இது சரிதான். ஆனால், இந்த அரசியல்வாதிகள் மாற்றுமதத்தவர்களிடம் இதே அறிவுரையைக் கூறத் தயாராக இருக்கிறார்களா?! இருக்கிறார்களா?!?!?! இருக்கிறார்களா?!?!?!... இதே அறிவுரையைக் கூறமுடியுமா? கூறமுடியுமா? கூறமுடியுமா?.... இல்லையே! இல்லையே!! இல்லையே!!! ஏன்?! ஏன்?! ஏன்?! ... நம் மக்கள் சிந்திக்க வேண்டும்! சிந்திக்க வேண்டும்! சிந்திக்க வேண்டும்! சிந்தித்தேயாக வேண்டும்!...

நம் மக்கள் சிந்திக்க ஆரம்பித்து விட்டால், நமது அரசியல் வாதிகள்; இந்திய விடுதலையை அடுத்து உடனடியாகச் செய்த செயல்கள், அடுத்தடுத்து செய்து வரக்கூடிய செயல்கள்.... அச்செயல்களால் ஏற்பட்டுள்ள விபரீத விளைவுகள்.... முதலியவைகளைச் சமுதாய வாதிகளோ! கலையுலகத்தார்களோ! தொழில் துறையினரோ! ... விவரித்துப் பேசவோ! விளக்கியுரைக்கவோ! தூக்கித் தாக்கிப் பேசவோ! இயலாது! இயலாது!! இயலாது!!!... இயலவே இயலாது! ஆனால், இந்துமத வாதிகளால்தான் மேற்படிச் செயல்களைச் செய்ய முடியும்! செய்ய முடியும்! செய்ய முடியும்! இதற்காகத்தான் இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர் அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அவர்கள் **'இந்துக்களே! இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் புரிந்து கொள்ளுங்கள்', 'இந்துக்களே! தமிழர்களே! தமிழாசிரியர்களே! இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்! இந்தியாவைக் காப்பாற்றிட இந்துவேதம் தழைக்கவும், இந்துமதம் பிழைக்கவும், உழைக்க வாருங்கள்....** எனும் அறிவிப்பு அழைப்புக்களைத் தொடர்ந்து ஏட்டளவிலும், நாட்டளவிலும் விடுத்துக் கொண்டிருக்கிறார். விடுத்துக் கொண்டே இருக்கின்றார். இதைப் புரிந்து குருதேவர், அந்தணர் அண்ணல் ஞானச்சாரியாருக்கு உதவிட முன் வாருங்கள்! முன் வாருங்கள்!! முன் வாருங்கள்!!!

## (5) **'எம்மதமும் சம்மதம்'**:-

நமது அரசும், அரசியல்வாதிகளும் இந்திய விடுதலைப் போர் முடிந்த உடனேயே 'எம்மதமும் சம்மதம்' என்ற கருத்து முழக்கத்தை அவசர அவசரமாக வெளியிட்டனர். அதற்குக் காரணம் போலியான இந்துமத வாதிகள் இந்திய விடுதலைப் போரில் பெரும்பங்கு வகித்ததுதான். இன்னும் சொல்லப் போனால், பெரும்பாலும் புகழ்வெறியும், பதவிவெறியும் பிடித்த தன்னல வெறியர்களும், குறுகிய நோக்குடையவர்களும் இந்துமதப் பற்றோ! பாசமோ! நம்பிக்கையோ! மெய்யான ஈடுபாடோ! இல்லாத இந்துமதத் துரோகிகளும், விரோதிகளும், எவ்விதமான மத உணர்வுமே இல்லாத அகம்பாவ ஆணவத் தன்னல வெறியர்களுமாக ... இந்திய விடுதலைப் போரின் தலைமையிலும், முன்னணியிலும் பங்கு பெற்றார்கள். அதனால்தான், இந்திய விடுதலைப் போர் ஒருவாறு முடிந்தும், முடியாமலும் இருந்த நிலையிலேயே, இந்திய விடுதலைப் போரின் முன்னணித் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் பதவி ஆசை, அதிகார ஆசை, புகழ் வெறி முதலியவைகளால் எப்படியாவது நாட்டில் அமைதியை, சுமுகமான சூழ்நிலையை, தற்காலிகமான ஒற்றுமையை, சமாதானச் சூழலை ... உருவாக்கித் தாங்கள் இந்திய அரசில் இடம் பெற்று நாடாளத் துடிதுடித்தனர். அவர்களுடைய துடிதுடிப்பு, பேராசை வெறி... முதலியவற்றின் விலைதான் இந்துமதம். அதாவது, 'இந்திய அரசியல்வாதிகளின் பேராசை, பொருளாசை, அதிகார ஆசை, பதவி ஆசை, புகழ் வெறி முதலியவைகளுக்குப் பலியானது இந்துமதம்தான்! இந்துமதம்தான்!! இந்துமதம் தான்!!!

இந்திய அரசியல்வாதிகளின் குறுகிய நோக்குக்கும், வெறிநிறைந்த போக்குக்கும் இரையானது இந்துமதம்தான்! இந்துமதம்தான்!! இந்துமதம்தான்!!! இந்த மாபெரும் பேருண்மையினைத் 'தெரிந்தும் தெரியாதவர்கள் போல்', 'அறிந்தும் அறியாதவர்கள் போல்', 'புரிந்தும் புரியாதவர்கள் போல்' நாடகமாடிக் கொண்டிருப்பவர்களே இன்றைய அரசியல் வாதிகள், இலக்கிய வாதிகள், கலையுலக வாதிகள், சமுதாய வாதிகள் எனப்படுவோர்.... எனவே, இந்துமதத்தைக் காப்பாற்றிட 'இந்துமத வாதிகள்தான் விழிச்சி பெற வேண்டும்!', 'இந்துமத வாதிகள்தான் எழிச்சி பெற வேண்டும்!!', 'இந்துமத வாதிகள்தான் முயற்சி செய்ய வேண்டும்!!!' ஏனெனில், நமது அரசும் அரசியல்வாதிகளும் இந்துக்களிடம் மட்டும்தான் 'எம்மதமும் சம்மதம்' என்ற அறிவுரையை, பரிந்துரையை வழங்குகிறுர்கள். இந்த அரசும், அரசியல் வாதிகளும் இந்துமதத்தவர் அல்லாத மாற்று மதத்தவர்களிடம் 'எம்மதமும் சம்மதம்' என்ற அறிவுரையையும், பரிந்துரையையும் கூறுவார்களா? கூறமுடியுமா? கூறினுல் என்ன நடக்கும்?!?!?! .... என்று விஞவெழுப்பிச் சிந்தித்திட்டால், 'இந்த அரசும் அரசியல்வாதிகளும் இந்துக்களை ஏமாற்றுகிறுர்கள்', 'இந்த அரசும் அரசியல்வாதிகளும் இந்துமதத்துக்கு விரோதமாகவும், துரோகமாகவும், எதிராகவும் செயல்படுகிறுர்கள்...' என்ற பேருண்மை விளங்கிடும். எனவே, இன்றைய நிலையில் இந்துக்கள் அனைவரும் ஒன்று திரண்டு, ஒற்றுமைப்பட்டு, இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் பாதுகாப்பதற்கு உரிய வழிவகைகளை ஆராய வேண்டும். செயல்திட்டங்களை உருவாக்க வேண்டும். இல்லாவிட்டால், 'இந்த உலகின் ஐந்து கண்டங்களிலும் பரவியிருந்த இந்துமதம், இன்றைக்கு ஒரே ஒரு கண்டமான ஆசியாக் கண்டத்தின் ஒரு துண்டமான, இந்தியத் துணைக்கண்டத்திற்குள் மட்டும் அடங்கி ஒடுங்கி சிதைந்து சீரழிந்து நைந்து நலிந்து மெலிந்து வாழும் நிலைமை மேலும் மோசமாகி இந்துமதம் இல்லாமல் போக நேரிட்டாலும் நேரிடலாம்.

## (6) **இந்துமதம் தேவை! தேவை!! தேவை!!!**

நமது இந்துக்களில் பெரும்பாலானவர்கள்,

- "இந்துமதம் வேறு; தாங்கள் கும்பிடுகின்ற, வணங்குகின்ற, வழிபடுகின்ற, பூசைசெய்கின்ற கடவுள்கள் வேறு"
- "இந்துமதத்திற்கும், நாட்டு நடப்பில் மக்கள் போற்றிப் பேணி வழிபட்டு விழாக்கள் எடுத்து வணங்கி வழிபட்டுக் கும்பிட்டுப் பூசை செய்யும் கோயில்களுக்கும், கடவுள்களுக்கும் தொடர்பே இல்லை"
- "இந்துமதம் இல்லாவிட்டாலும் இந்துக் கோயில்கள் இருக்க முடியும். இந்துக் கோயில்களில் இந்துக்கள் பூசை செய்து, வணங்கி வழிபட்டு கும்பிட்டு அருட் பயன்களைப் பெற்று வாழுவதற்கு இந்துமதம் தேவை இல்லை",
- "இந்துமதம் என்ற ஒன்று இருப்பதால்தான் மாற்று மதங்களோடு பிணக்கு, போராட்டம், சண்டை சச்சரவு, ... முதலியவைகள் நடக்கின்றன. இந்துக்களுக்கும், மாற்று மதத்தவர்களுக்கும் போராட்டங்களும், இழப்புக்களும், துன்பங்களும், தொல்லைகளும் வருகின்றன. எனவே, இந்துமதம் என்ற ஒன்று தேவையில்லை"....

.... என்ற தவருன கருத்துக்களை, பிழையான கருத்துக்களைப் பெற்றிருக்கிறுர்கள்! பெற்றிருக்கிறுர்கள்!! பெற்றிருக்கிறுர்கள்!!!.... இதுதான் உண்மை! இதுதான் உண்மை!! இதுதான் உண்மை!!!.... இந்த உண்மையை முறையாகவும், முழுமையாகவும் உணர்ந்ததால்தான்;

- இந்து மதத்தின் தலைவர்கள்தான் 'இந்துக் கடவுள்கள்', 'இந்துத் தேவர் தேவதைகள்', 'இந்து தெய்வங்கள்', 'இந்து ஆண்டவர்கள்'."
- "இந்து மதத்தின் செயலகங்கள்தான் இந்துக் கோயில்கள்"
- இந்து மதத்தின் கருத்தரங்குகளும், கலை நிகழ்ச்சிகளும், பயிற்சி முகாம்களும் நிறைந்த மாநாடுதான் இந்துமத விழாக்கள், கோயில் திருவிழாக்கள், மதத் திருநாட்கள்",

- ❖ "இந்துமதத்தின் செயல்நிலைகள்தான், செயல்வடிவங்கள்தான் இந்துக் கோயில்களில் நிகழும் பூசைகள், வழிபாடுகள், வணங்குதல்கள், கும்பிடுதல்கள்..... முதலியவை".
- ❖ "இந்துமதம் வகுத்தளித்துள்ள சாத்தர, சாத்திர, சாத்திறங்கள்... முதலியவற்றின் மூலம்தான் இந்துமதப் பழக்க வழக்கங்கள், சடங்குகள், விரதங்கள், வழிபாட்டு முறைகள், வணங்கு முறைகள், பூசை முறைகள், கும்பிடுதல் முறைகள், அழுகை நெறிகள், தொழுகை நெறிகள், எள்ளல் நெறிகள், ஏசல் நெறிகள், ... முதலியன அனைத்தும் ஒழுங்காக வாழுகின்றன....

எனவே, இந்துமதம் தேவை! தேவை!! தேவை!!! அதாவது, இந்துமதம் வாழ்ந்தால்தான் இந்துமதம் வலிமையாக இருந்தால்தான்; இந்துமதம் பொலிவோடு விளங்கினால்தான், இந்துமதம் ஆட்சி உரிமையையும், பெருமையையும் பெற்றிருந்தால்தான் இந்துக்கள் வாழமுடியும்! இந்துக் கோயில்கள் வாழ முடியும்!! இந்துக்களின் வாழ்வியல் முறைகளும், நெறிகளும் வாழ முடியும்!!!.

இவற்றை எண்ணித்தான், இன்று வாழும் பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள், "இந்துவேதம் தழைக்க! இந்துமதம் பிழைக்க! இந்துக்களே! தமிழர்களே! தமிழாசிரியர்களே! உடனே இந்துவேத ஆச்சாரியாராகுங்கள்!!!" என்ற அறிவிப்பு அழைப்பைத் தொடர்ந்து வழங்குகிறார்! வழங்குகிறார்!! வழங்குகிறார்!!!. இவர் இன்றைய அரசும், அரசியல்வாதிகளும், சமுதாயவாதிகளும், இலக்கிய வாதிகளும், கலையுலக வாதிகளும்.... தம்மைப் பற்றி என்ன கருதுகிறார்கள்???? என்னென்ன கூறுகிறார்கள்?!?!?!.... என்பதை எல்லாம் கூர்ந்து கவனித்து, ஆராய்ந்தறிந்து, அவற்றிலுள்ள சிக்கல்களுக்கும் விடை கூறித்தான் செயல்பட்டு வருகிறார். ஆனால், தமக்கு வரவேற்போ! பாராட்டோ! ஆதரவோ! உதவியோ!.... கிடைக்கவில்லையே என்று வருந்துவதில்லை! வருந்துவதில்லை!! வருந்துவதில்லை!!! அதேசமயம், பிறர் தம்மை எதிர்ப்பது! பகைப்பது! குறைகூறுவது!, குற்றம் சாட்டுவது! நகைப்பது!.... முதலியவைகளை யெல்லாம் முழுமையாகத் தெரிந்து புரிந்துதான் செயல்படுகிறார்! தெரிந்து புரிந்துதான் செயல்படுகிறார்! தெரிந்து புரிந்துதான் செயல்படுகிறார்! எனவேதான், "இந்துவேதம் தழைக்க, இந்துமதம் பிழைக்க, உழைக்க ஞானாச்சாரியார் தலைமையை ஏற்றிட வருக! வருக!! வருக!!!" என்று அறிவிப்பு அழைப்பு விடுக்கப்படுகிறது! "இந்துக்களே சிந்தியுங்கள்!! சந்தியுங்கள் ஞானாச்சாரியாரை"

## (7) இந்துமதத்துக்கு வருங்காலம் உண்டா? இல்லையா?

"இன்றைய தமிழக மக்களில் எவ்வளவு பேர் ஆத்திகர்களாக இருக்கிறார்கள்? எவ்வளவு பேர் நாத்திகர்களாக இருக்கிறார்கள்! எவ்வளவு பேர் தாங்கள் நாத்திகரா? ஆத்திகரா? என்று எண்ணிப் பார்க்காமல்! எண்ணிப் பார்க்கத் தெரியாமல்! எண்ணிப் பார்த்தும் எந்த முடிவுக்கும் வரமுடியாமல் வாழுகிறார்கள்? .... என்பது பற்றியும் எமக்கு நன்றாகத் தெரியும்! தெரியும்!! தெரியும்!!!" - என்று மிகமிகத் தெளிவாகக் கூறியபடியேதான் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் செயல்படப் புறப்பட்டிருக்கிறார், செயல்பட்டுக் கொண்டிருக்கிறார், ... என்பதை இந்துக்கள் எல்லோரும்! தமிழர்கள் எல்லோரும்! தமிழாசிரியர்கள் எல்லோரும்! சிந்தித்திடல் வேண்டும். ஏனெனில், இந்துமதத்துக்கு வருங்காலம் உண்டா? இல்லையா?.... என்று இந்துமதம் பிறந்த நாட்டிலேயே கேள்வி எழக்கூடிய நிலை உருவாகி விட்டது இன்றைக்கு!. இப்படிப்பட்ட காலக் கட்டத்தில்;

- ➢ இந்துக்களே விழிச்சியுறுங்கள்!
- ➢ இந்துக்களே எழிச்சி பெறுங்கள்!
- ➢ இந்துக்களே! இந்துவேதத்தில் பயிற்சி பெறுங்கள்!

- இந்துக்களே! இந்துவேத வழியில் முயற்சி செய்யுங்கள்!
- இந்துக்களே! இந்துவேதத்தைப் புரிந்துகொண்டு செயல்பட்டால்தான் இந்துக்களுக்கு மலர்ச்சியும் மறுமலர்ச்சியும் உண்டு!
- இந்துக்களே! இந்துவேத வழி வாழ்ந்திட்டால்தான், இந்துக்களுக்கு உயர்ச்சி உண்டு!
- இந்துக்களே! இந்துவேத நூல்களேயும், இந்துமத நூல்களேயும் முறையாகக் கற்று நிறைந்த புலமை பெற்ற ஆச்சாரியார்களின் தலேமையை ஏற்றால்தான் இந்துமதம் செழிச்சி பெறும்.
- இந்துக்களே! பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியும், அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருளியுள்ள இந்துவேத நூல்கள் முன்னூற்றுத் தொண்ணூற்றாறையும், இந்துமத நூல்கள் முப்பத்தாறையும் தமிழ்மொழி நன்கு தெரிந்த தமிழாசிரியர்கள் மூலம் படித்தறிந்து செயலாக்கும் நிலே குமரி முதல் இமயம் வரை பரவலாக, வளமாக உருவானால்தான்; இந்துமத ஆட்சி மீட்சி பெறும்! இந்துமத ஆட்சி மீட்சி பெறும்!! இந்துமத ஆட்சி மீட்சி பெறும்!!!

(8) இப்படிக் கூறுவதற்குக் காரணம் இந்துவேத நூல்கள், இந்துமத நூல்கள் குறிப்பிட்ட அளவாவது, இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டேயாக வேண்டும்! அதாவது, குமரி முதல் இமயம்வரை இந்துக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்களுக்கு ‘இந்துவேத நூல்கள்’, ‘இந்துமத நூல்கள்’ என்ற இருபிரிவுகள் இருப்பதே தெரியாது! தெரியாது!! தெரியாது!!!. தெரியவே தெரியாது!!!! இதைவிடப் பெரிய செய்தி என்னவென்றால், அநேகமாக எந்த இந்துவுக்குமே ‘இந்துவேதம்’, ‘இந்துமதம்’ பற்றிய நூல்கள் அனேத்தும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன என்ற பேருண்மை தெரியவே தெரியாது! தெரியவே தெரியாது!! தெரியவே தெரியாது!!!.... இதுதான் உண்மை! இதுதான் உண்மை!! இதுதான் உண்மை!!! இந்த உண்மை குமரிமுனே முதல் வட இமயமலேயின் விளிம்பு வரை வாழும் இந்துக்களுக்காவது முறையாகவும், முழுமையாகவும் தெரிவிக்கப் பட்டாக வேண்டும்! தெரிவிக்கப் பட்டாக வேண்டும்!! தெரிவிக்கப் பட்டாக வேண்டும்!!! தெரிவிக்கப் பட்டேயாக வேண்டும்!

*[... ... ... தொடர்ச்சி அடுத்த இதழில்]*

**“The Religious Field has many wonderful Sciences and Arts which are cultivated through ages by the attempt and effort of innumerable men.**

**Of course, they are not accepted by the educated society. Taking this as an advantage, the illiterates have mastered these Sciences and Arts and do all sorts of malpractices. And the literates hate those arts by naming them as “Witchcrafts”, “Black Art”, “Magic”, “Sorcery” and so on....**

**This should not be continued. The educated must come forward to do researches in this field with a scientific atmosphere and with a rationalistic approach and attitude. Then only the mysteries, puzzles, wonders, difficulties, complications... and other unknown problems and evils can be eliminated from the human society. That will alone elevate the human knowledge and understandings. And it will lead to the enlightened stage of the human society.....”**

***— Taken from the writings of The Siddhar Kakkaiar Mr M Palanisamy Pillai***

